செய்திக் குறிப்பு dt: 04.01.18

குப்பைகளை தரம் பிரித்துக் கொடுப்பதற்கான இரண்டு நாள் கருத்தரங்கு பயிற்சி முகாம் இன்று மதியம் 2.30 மணியளவில் பெருந்தலைவர் காமராஜர் கல்வியியல் கல்லூரியில் சுமார் 100-க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் மாவட்ட ஆட்சியர் திரு.R.கேசவன் இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார்கள். அப்போது மாவட்ட ஆட்சியர் பேசுகையில் இந்தக் குப்பைகளினால் காற்று மாசுபடுகிறது. நிலங்கள் அழிந்து வருகிறது. ரோடுகள் சுத்தமில்லாமல் உள்ளது. இதற்கு முக்கிய காரணம் பிளாஸ்டிக் பொருட்கள்தான். நம் முன்னோர்கள் வாழ்ந்த காலங்களில் பிளாஸ்டிக் பைகள் இல்லை. அப்படியே குப்பைகள் இருந்தாலும் அதை மாடுகளுக்கும், விளை நிலங்களுக்கும் பயன்படுத்தி வந்தார்கள். இதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி காலனிகளில் இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. காலனிகளில் 60% மக்கள்தான் குப்பைகளை பிரித்து தருகிறார்கள். மீதி 40% மக்கள் இதை பொருட்படுத்துவதில்லை. இந்த நிலை மாற வேண்டும் என்றால் 100% மக்களும் மாறினால் தான் இந்த திட்டம் வெற்றி அடையும், தூய்மையான காலனிகள் மற்றும் தூய்மையான பாரதத்தை பார்க்க முடியும். பிறக்கும் நம் எதிர்கால தலைமுறைகள் சிறப்பாக இருக்க வேண்டும் என்றால் நாம் குப்பை இல்லாத இந்தியாவை உருவாக்க வேண்டும். இப்போது தான் காலனிகளில் உள்ள சில இளைஞர்கள் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என முன் வருகிறார்கள்.

இதற்கு உதாரணம் நப்பாலியாபுரம் குளத்தை சுத்தம் செய்ததுதான். அவர்களை உண்மையில் பாராட்டவேண்டும். தண்ணீரை வெளியே விடாதீர்கள். தோட்டத்திலேயே அதை விட்டு பூமியில் இறக்கும்படி செய்யுங்கள் என்றும் கூறினார்கள். மேலும் 2016-லிலேயே குப்பைகளை தெருவில் போடக்கூடாது என்று சட்டம் வந்துள்ளது. அந்த சட்டத்தை நாம் மதிக்க வேண்டும். தெருவில் குப்பைகளை போடுவது மிகப்பெரிய தவறாகும். குப்பைகளை தரம்பிரிக்காமல் தந்து அதை பறவை பேட்டையில் கொட்டி எரிக்கிறார்கள். இதனால் அருகில் உள்ள கிராமங்கள் சிரமத்துக்கு உள்ளாகிறார்கள். துப்புரவு பணியாளர்கள் செய்யும் வேலைகளை பார்த்து நாம் மாற வேண்டும். மேலும் அனைத்து பள்ளி மாணவர்களையும் அழைத்து சென்று பறவைபேட்டையில் அவர்கள் படும் கஷ்டத்தை காட்ட இருக்கிறோம். நாளைய மாணவிகளாகிய நீங்கள் தான் மக்களிடம் இந்த விழிப்புணர்வை எடுத்துச் செல்ல வேண்டும் என கூறினார்கள். இந்த இரண்டு நாள் விழிப்புணர்வு முகாமை (விழிப்புணர்வு நிகழ்ச்சியை) அறிவியல் தொழில் நுட்பத்துறையை சார்ந்த பேராசிரியர் திரு. அசோக்குமார், மற்றும் புதுவை பல்கலைக்கழகத்தை சார்ந்த பேராசிரியரும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி அளிக்கிறார்கள். உடன் நகராட்சி) ஆணையர் மற்றும் அனைத்து கொம்யூன் ஆணையர்களும் கலந்து கொண்டனர்.

4/1/18